<u>செய்தி வெளியீடு எண்.672</u> <u>19.10.2007</u>

## செய்திவெளியீடு

### மைய அரசின் 2008 ஆம் ஆண்டு கலைத்திறன் உதவித் தொகைத் திட்டம்

மைய அரசின் பண்பாட்டு அமைச்சகத்தின்கீழ் இயங்கிவரும் பண்பாட்டு ஆதாரங்கள் மற்றும் பயிற்சி மையம் பாரம்பரிய இசை, ஓவியம், சிற்பம், கைவினை, மற்றும் நாட்டுப்புற கலைகளில் ஈடுபடும் 10வயது முதல் 14 வயதுக்குட்பட்ட இளஞ்சிறார்களின் திறமையை வளர்ப்பதற்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதுவரை 7582 இளங்கலைஞர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. 2008–2009ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் 5 பேர் வீதமும், துணை மாநிலங்களுக்கு 3 பேரும், ஜம்மு & காஷ்மீர் மாநிலத்திற்கு 10 பேரும் ஆக மொத்தம் 400 பேருக்கு உதவித் தொகை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த உதவித் தொகை ஆசான்/ நிறுவனத்திற்கு அளிக்கப்படும் கட்டணத்துடன் ஆண்டுக்கு ரூ. 3600/ வீதம் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் உதவித் தொகை பெறும் கலைஞரின் திறன் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு முதற்கட்டமாக இரண்டாண்டுகளுக்கும், பின்னர் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கும் வகையில் பல்கலைக்கழக பட்டப்படிப்பு நிலை வரையிலும் அல்லது 20வயது வரை உதவித்தொகை வழங்கப்படும்.

இம்மையம் 2008 – 2009 ஆம் ஆண்டிற்கான உதவித்தொகை வழங்குவதற்காக 01-07-1994 முதல் 30-06-1998 வரையிலான காலத்தில் பிறந்த தகுதிவாய்ந்த சிறார்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்கிறது. ஏதாவது ஒரு ஆசான் அல்லது நிறுவனத்தில் குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் கலைப் பயிற்சி பெறுவது விண்ணப்பிக்க அவசியமானதாகும். விண்ணப்ப படிவத்தைப் பின்வரும் முகவரிகளில் நேரிலோ/ அஞ்சல் மூலமாகவோ இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

1) பண்பாட்டு ஆதாரங்கள் மற்றும் பயிற்சி மையம்.

பிளாட்டு எண் 15ஏ, செக்டார்– 7,

துவரகா,

புதுடெல்லி– 110075.

2) பண்பாட்டு ஆதாரங்கள் மற்றும் பயிற்சி மைய ,வட்டார மையம்.

முதல்மாடி, பட்டுவளர்ப்புத்துறை கட்டிடம்,

ஜீபிலி மலை,

ஹைதராபாத்,

ஆந்திரப்பிரதேசம்– 500 033.

3) பண்பாட்டு ஆதாரங்கள் மற்றும் பயிற்சி மைய வட்டார மையம்.

33ஏ, புதிய பதேபுரா,

உதப்பூர்,

ராஜஸ்தான்– 313001.

விண்ணப்பபடிவம் இம்மையத்தின் இணையதளம் www.ccrtindia. gov.in ல் பெற்றுக்கொள்ளலாம்.

புதுடில்லி பண்பாட்டு ஆதாரங்கள் மற்றும் பயிற்சி மையத்திற்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய கடைசி நாள் 31.12.2007.

இவ்வுதவியைப் பெற்று வளரும் கலைஞர்கள் வளம் பெறக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.